மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 31/2021

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். - திரு.ஆறுமுகச்சாமி
த/பெ. - திரு.வேலுச்சாமி
கிராமம் - மந்தித்தோப்பு
தொழில் - கூலி
தாலுகா - கோவில்பட்டி
வயது - 64.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 06.01.2021 ம்தேதியில் வாதி,பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் கூடிய அலுவலக நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான இணையதள அஞ்சல ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 17.10.2020 ம் தேதியில் வாதி,மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனு நகல் அசல் ரசீதுடன் கூடியது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 09.01.2021 ம் தேதியில் வாதி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனு நகல் அசல் ரசீதுடன் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
17.04.2025.